# பா.ஜ.க. நெருக்கடி கொடுத்தாலும் சந்திப்போம்!

7ஆம் பக்கத் தொடர்ச்சி

**செய்தியாளர்**: *நிதிப் பகிர்வு போன்ற விவகாரங்களில் ஒன்றிய அரசுடன் தொடர்ந்து மோதல் போக்கு நிலவுவதால் தமிழ்நாட்டின் வளர்ச்சி பாதிக்கிறதா? ஒன்றிய அரசுடன் இணக்கமாகச் சென்றால் தமிழ்நாடு வளர்ச்சியடையும் என்கிறாரே பா.ஜ.க.வின் தமிழிசை?*

**மு.க.ஸ்டாலின்**: பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் அனைத்தும் வளர்ந்துவிட்டதா? இல்லையே. அனைத்துச் சமூகக் குறியீடுகளிலும் தமிழ்நாடுதான் வளர்ந்துள்ளது. கடந்த நிதியாண்டில் 11.19 விழுக்காடு என்ற உயரிய பொருளாதார வளர்ச்சியைத் தமிழ்நாடு எட்டி இருக்கிறது என்பதுதான் திராவிட மாடல் ஆட்சியின் மகத்தான சாதனையாகும். பா.ஜ.க. தயவு இல்லாமல் மட்டுமல்ல, பா.ஜ.க. இடையூறாக இருந்தாலும் அதையும் மீறித் தமிழ்நாடு வளரும்.

### மக்களைப் பிரிப்பதுதான் பா.ஜ.க.வின் நோக்கம்!

**செய்தியாளர்**: *போர்ச்சூழலில் மக்கள் சந்திக்கும் சிரமங்களைச் சமாளிக்க முடியாமல் ஒன்றிய அரசு திணறுவதாகக் கருதுகிறீர்களா? காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு, சிறு வியாபாரிகள் முடங்கியிருப்பது போன்றவை இந்தத் தேர்தலில் உங்களுக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்தியிருக்கிறதா?*

**மு.க.ஸ்டாலின்**: இதைப் பற்றியெல்லாம் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குக் கவலை இல்லை. கொரோனா காலத்தில் மக்களைக் காப்பாற்ற எதுவும் செய்யாமல் விளக்கு ஏற்றுங்கள், மணியடியுங்கள், கை கழுவுங்கள் என்று சொல்லி கை கழுவியவர் தான் பிரதமர் மோடி. இப்போதும் 'கொரோனா காலம் போல நினைத்துக் கொள்ளுங்கள்' என்று அவரே சொல்லி விட்டாரே!

பெட்ரோல் விலை உயர்வு, டீசல் விலை உயர்வு, சிலிண்டர் விலை உயர்வு, விலைவாசிகள் எகிறுவது ஆகியவை பற்றி எல்லாம் பிரதமர் மோடிக்கு எந்தக் காலத்திலும் கவலை இருந்தது இல்லை. போர்ச் சூழலில் தான் இதுபோன்ற நெருக்கடிகள் இருக்கிறதா என்ன? எப்போதுமே இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு இதெல்லாம் பிரச்சினைகள் அல்ல. வகுப்புவாதம், மக்களைப் பிரிப்பது இவை மட்டும் தான் நோக்கம்.

**செய்தியாளர்**: *மக்களுக்கான திட்டங்கள், கூட்டணிக் கணக்குகள், பரப்புரை வியூகம் போன்றவற்றால் தேர்தல் களம் தி.மு.க.வுக்குச் சாதகமாக இருப்பது போல் சில கருத்துக் கணிப்புகள் சொல்கின்றன. ஒன்றிய பா.ஜ.க. அரசின் மூலம் ஏதேனும் நெருக்கடி ஏற்படுத்தப்பட்டு களநிலவரம் திசை மாற வாய்ப்பிருப்பதாகக் கருதுகிறீர்களா?*

**மு.க.ஸ்டாலின்**: அப்படி எதுவும் இனி நடக்காது என்று நினைக்கிறேன். பா.ஜ.க. அப்படி எந்த நெருக்கடி கொடுத்தாலும் சந்திப்போம்.

### மாநில அரசு மீது வருத்தப்படுவது நியாயமல்ல!

**செய்தியாளர்**: *சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் தி.மு.க.வுக்கு என்ன சிக்கல் என்று எதிர்க்கட்சிகள் கேட்கின்றன. ஒன்றியத்தில் பாராமுகம் காட்டினாலும், தமிழ்நாடு அரசு தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி இதை ஏன் உடனடியாகச் செய்யவில்லை?*

**மு.க.ஸ்டாலின்**: சாதிவாரிக் கணக்கெடுப்பை ஒன்றிய அரசு தான் எடுக்க வேண்டும். மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டம், அதாவது, Census Act 1948ன்கீழ் ஒன்றிய அரசு தான் இந்தப் பணியைச் செய்ய வேண்டும். மாநில அரசால் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்த முடியாது. சமூக பொருளாதாரப் புள்ளி விவரங்களை மட்டுமே எடுக்க முடியும். 2008 ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் சேகரிக்கும் சட்டத்தின்கீழ் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை மாநில அரசுகள் மேற்கொள்ள இயலாது.

Survey என்ற பெயரில் புள்ளி விவரங்களைச் சேகரிப்பது வேறு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது வேறு. மாநில அரசுகள் சர்வே மட்டும் தான் எடு முடியும். ஒன்றிய அரசு தான் Census எடுக்க முடியும்.

அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 246ன்படி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது. எனவே இதில் மாநில அரசு மீது வருத்தப்படுவது நியாயமல்ல.

### மதத்தை வைத்து அரசியல் செய்வது பா.ஜ.க.தான்!

**செய்தியாளர்**: *பகுத்தறிவு பேசும் தி.மு.க. ஆட்சியில் கோயில் திருப்பணிகள் இவ்வளவு தீவிரமாக நடப்பது ஆன்மீக அக்கறையா? அல்லது 'இந்து எதிர்ப்பு' பிம்பத்தை மாற்றி, பா.ஜ.க.வின் மத அரசியலை எதிர்கொள்ள நீங்கள் கையாளும் உத்தியா?*

**மு.க.ஸ்டாலின்**: இது அனைவருக்குமான அரசு. அதில் பக்தர்களும் அடக்கம் தானே? அனைத்துத் துறை வளர்ச்சி என்று சொன்னால், அதில் இந்து சமய அறநிலையத் துறையையும் சேர்த்துத் தானே வளர்க்க வேண்டும். அதைத் தான் செய்துள்ளோம். கோவில் பணிகளைச் செய்யாமல் போயிருந்தால், 'ஏன் கோவில்களை நீங்கள் கண்டுகொள்ளவில்லை?' என்று தானே கேட்பீர்கள்?

பா.ஜ.க.வின் மதவாத அரசியலுக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. பா.ஜ.க. வுக்கும் கோவிலுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. கோவில்கள் மீது உண்மையான அக்கறை கொண்டது பா.ஜ.க. என்றால், இத்தனை திருப்பணிகள் நடந்திருப்பதை அவர்கள் பாராட்டி இருக்க வேண்டாமா? அவர்களது நோக்கம் மதத்தை வைத்து அரசியல் செய்வது. நாங்கள் மதத்தை வைத்து அரசியல் செய்யத் திருப்பணி கள் செய்ய வில்லை. பக்தர்கள் மனம் மகிழ்ந்தால் போதும் என்று எங்கள் கடமையைச் செய்கிறோம்.

**செய்தியாளர்**: *அ.தி.மு.க., பா.ஜ.க.,த.வெ.க... இந்தத் தேர்தலில் உங்களின் பிரதான எதிரியாக யாரைப் பார்க்கிறீர்கள்?*

**மு.க.ஸ்டாலின்**: பொதுவாக நான் யாரையும் எதிரியாகப் பார்க்கும் இயல்பு கொண்டவன் அல்ல.

### 200யை தாண்டி வெற்றி பெறுவோம்!

**செய்தியாளர்**: *நீங்கள் பரப்புரைக்குச் செல்லும் இடங்களிலும், உதயநிதி செல்லும் இடங்களிலும் பெரும் கூட்டம் காணப்படுகிறது. கூட்டத்தை வைத்து வெற்றி / தோல்வியை கலைஞர் கணித்துவிடுவார் என்பார்கள். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய உங்கள் கணிப்பு என்ன?*

**மு.க.ஸ்டாலின்**: 200 தொகுதிகளைத் தாண்டி வெற்றி பெறுவோம் என்பதுதான் என்னுடைய கணிப்பு.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

**நன்றி**: 'இந்து தமிழ் திசை' 7.4.2026



சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி அனிதா அச்சீவர்ஸ் அகாடமி களப்பணியாளர்கள் கலந்தாய்வு கூட்டத்தில் இந்து சமய அறநிலை துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர் பாபு ஆலோசனை வழங்கினார். கூட்டத்தில் கொளத்தூர் கிழக்கு மேற்கு பகுதி கழக செயலாளர்கள் ஐசிஎப்.வ.முரளிதரன், எ.நாகராஜன், வில்லிவாக்கம் தொகுதி கழக வேட்பாளர் கார்த்திக் மோகன், சரிதா மகேஷ் குமார் எம்.சி, அனிதா அச்சீவர்ஸ் ஹெலன் மற்றும் 500 க்கும் மேற்பட்ட அனிதா அச்சீவர்ஸ் களப்பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.









# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். இரண்டு கட்ட பரப்புரை முடித்துள்ள நிலையில், மூன்றாம் கட்டமாக சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்களில் பரப்புரை மேற்கொள்ள உள்ளார். அதன் விவரம் வருமாறு :

**8.4.2026 புதன்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | திருவள்ளூர் | மருத்துவக் கல்லூரி சாலை சந்திப்பு, திருவள்ளூர். |
| காலை 10.30 மணி | ஆவடி | மாநகராட்சி அலுவலகம் அருகில், ஆவடி. |
| காலை 11.30 மணி | அம்பத்தூர் | பழைய எம்.டி.எச்.சாலை, முருகன் கோயில் அருகில், அம்பத்தூர். |
| மாலை 4.00 மணி | கொளத்தூர் | ஜம்புலிங்கம் சாலை, ஜி.கே.எம்.குடியிருப்பு, கொளத்தூர். |
| மாலை 4.45 மணி | வில்லிவாக்கம் | போர்ச்சிஸ் சாலை, அயனாவரம். |
| மாலை 6.00 மணி | எழும்பூர் | தானா தெரு, புரசைவாக்கம். |
| மாலை 6.45 மணி | துறைமுகம் | மகாசக்தி ஓட்டல், மின்ட் சாலை, சௌகார்பேட்டை. |
| இரவு 7.45 மணி | இராயபுரம் | சிமெண்ட் சாலை – திருவொற்றியூர் சாலை சந்திப்பு, இராயபுரம். |
| இரவு 8.30 மணி | ஆர்.கே.நகர் | காசிமேடு சிக்னல், எஸ்.என்.செட்டி தெரு சந்திப்பு, ஆர்.கே.நகர். |

**9.4.2026 வியாழக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | பொன்னேரி | பஜார் தெரு, பொன்னேரி. |
| காலை 10.30 மணி | மாதவரம் | பழைய மாநகராட்சி அலுவலகம் எதிரில், பஜார் தெரு, மாதவரம். |
| காலை 11.30 மணி | பெரம்பூர் | அசோக் பில்லர், சத்தியமூர்த்தி நகர் சாலை, வியாசர்பாடி. |
| மாலை 4.00 மணி | அண்ணா நகர் | டி.பி.சத்திரம், அண்ணா நகர். |
| மாலை 4.45 மணி | ஆயிரம் விளக்கு | சுதந்திரதினப் பூங்கா அருகில், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம். |
| மாலை 6.00 மணி | தியாகராய நகர் | முத்துரங்கன் சாலை, பேருந்து நிலையம் அருகில், தியாகராய நகர். |
| மாலை 6.45 மணி | விருகம்பாக்கம் | மார்க்கெட், எம்.ஜி.ஆர்.நகர். |
| இரவு 7.45 மணி | சைதாப்பேட்டை | வேளச்சேரி சாலை, சின்னமலை. |
| இரவு 8.45 மணி | சோழிங்கநல்லூர் | சர்ச் சாலை, கந்தன்சாவடி. |

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை – 18
நாள் : 7.4.2026

கலைஞர் 100 1924 - 2023






திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் வழக்கறிஞர் கே.எஸ்.இரவிச்சந்திரனை ஆதரித்து, திரு.வி.க நகர் வடக்கு பகுதி வட்டம் 71க்கு உட்பட்ட பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பு நடைபெற்றது. திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளரும் சென்னை மாநகராட்சி மேயருமான பிரியா ராஜன், தாயகம் கவி எம்.எல்.ஏ, பகுதிச் செயலாளர் தமிழ்வேந்தன், பகுதித் துணைச் செயலாளர் ராஜன், மாமன்ற உறுப்பினர் புனிதவதி எத்திராஜன், வட்டச் செயலாளர் பரிமளா சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தோழர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.